முரசொலி பாசறை

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம்.**



# இடம் பொருள் கலைஞர் 29







# அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம்

## பேசப்பட வேண்டிய வரலாறு!

**வ**ரலாறு என்பது கடந்த காலத்தை அறிந்து கொள்ளும் தகவல் தொகுப்பு அல்ல. அது அடுத்தத் தலைமுறை தெரிந்துகொள்ள வேண்டிய உண்மை என்பார்கள். வரலாற்றில் இடமில்லாதவர்கள் அல்லது வரலாற்றை உருவாக்காதவர்கள் வேண்டுமானால், வரலாற்றின் மீது வெறுப்பு கொள்ளலாம். அல்லது வரலாற்று உண்மைகள் மீது அச்சம் கொள்ளலாம். ஆனால், வரலாற்றை உருவாக்கியவர்களும், வரலாற்றை மாற்றியவர்களும் அவர்களது வாரிசுகளால் உயர்த்திப் பிடிக்கப்படுவார்கள் என்பது வரலாற்றின் தவிர்க்க முடியாத விதி.

எத்தனை தலைமுறைகள் கடந்தாலும், அவர்களின் வரலாறு மீண்டும் மீண்டும் படிக்கப்பட வேண்டும், அப்போதுதான் அந்தத் தலைமுறை எந்த இடத்தில் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியும். அந்த வரலாற்றைப் படிப்பதற்காகவே உயர்ந்து நிற்கின்றன மணிமண்டபங்கள். அந்த வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய ‘பாபா சாகேப்’ அண்ணல் அம்பேத்கருக்குச் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது அழகிய மணிமண்டபம். சாதி, இனம், மதம், மொழி என்கிற வரையறைகளை எல்லாம் கடந்து ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாய் ஒலித்த அரசியல் சாசனச் சிற்பிக்கு அந்த மண்டபத்தை எழுப்பியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்.

### தமிழ்நாட்டில் அண்ணல்

அண்ணல் அம்பேத்கரை தமிழ்நாட்டு மக்களிடம் மிகப் பரவலாகக் கொண்டு சேர்த்தவர் தந்தை பெரியார். அதேபோல வடமாநிலங்களில் தந்தை பெரியாரைக் கொண்டு சேர்ப்பதற்கு முன் நின்றவர் அண்ணல். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை மீது அவர்கள் கொண்டிருந்த அக்கறை, அரசியல் செயல்களுக்காகவே பெரியாரை ‘தென்னாட்டு அம்பேத்கர்’ என்றும் அண்ணலை ‘வடநாட்டுப் பெரியார்’ என்றும் அழைப்பார்கள்.

அண்ணல் அம்பேத்கரை உயர்த்திப் பிடிப்பதில் கழகமும் சளைத்தது அல்ல. “டாக்டர் அம்பேத்கரின் வாழ்க்கை வரலாறு வீட்டுக்கு வீடு படித்துக் காட்டப்பட வேண்டும். ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் அவர் உரியவர் அல்ல, அனைத்து மக்களும் அவரைப் பாராட்ட உரிமை உண்டு” என 1958-ஆம் ஆண்டிலேயே பேரறிஞர் அண்ணா முழங்கினார். அதேபோல், முத்தமிழறிஞர் கலைஞரின் எண்ணத்திலும் செயலிலும் ஒடுக்கப்பட்ட மக்களிடம் கொண்டிருந்த அக்கறை, சட்டங்களாகவும் திட்டங்களாகவும் வெளிப்பட்டுள்ளன.

### முடிவுக்கு வந்த சோதனைகள்

அண்ணல் அம்பேத்கருக்குச் சென்னையில் மணிமண்டபம் வேண்டுமெனப் பல கோரிக்கைகள், பலரால் முன்வைக்கப்பட்டுள்ளன. 1993-ஆம் ஆண்டில் அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் தனது அரசியல் தடாலடிக்காக அம்பேத்கருக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என அறிவித்தார். ஆனால், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தொடுத்த வழக்கு அவரது அறிவிப்பை முடக்கியது. வழக்கை எடுத்து நடத்தவும் அவரது அரசு பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. 1994-ஆம் ஆண்டில் சில கட்டுப்பாடுகளுடன் அனுமதி வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்புக்குப் பின்னரும் மணிமண்டபப் பணிகளை அம்மையார் மேற்கொள்ளவில்லை.

கல்வெட்டில் பெயர் பொறிப்பதற்காகவே திட்டங்களைத் தொடங்குவதும் பின்னர் அவற்றைக் கிடப்பில் போடுவதும் அவரது வழக்கம். தவிர, கலைஞர் ஆட்சியில் தொடங்கப்பட்டு வேலை முடிக்கப்பட்ட திட்டங்களில், பின்னர் ஆட்சிக்கு வந்து அவற்றைத் தொடங்கி வைத்து, அவர் பெயரை போட்டுக் கொள்வதும் அவரது இயல்பான அரசியல் பண்பாக இருந்தது.

அப்படித்தான் அண்ணல் மணிமண்டபத்தில் அவரது அறிவிப்பு முடங்கியது. அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த முத்தமிழறிஞரின் முன்னெடுப்பில், அவரது வடிவமைப்பு மேற்பார்வையில் அண்ணல் அம்பேத்கருக்கு மணிமண்டபம் அமைக்கத் திட்டமிட்டார்.

### நிறைவான வடிவமைப்பு

நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்படி, 1998-ஆம் ஆண்டில் அடையாறு பசுமைவழிச் சாலையில், 1.50 ஏக்கரில் மணிமண்டபப் பணிகள் தொடங்கப்பட்டன. 0.75 ஏக்கர் அளவில் மணிமண்டபக் கட்டடமும், 0.75 ஏக்கர் அளவில், பசுமைப் புல்வெளிகளும் அழகுற அமைக்கப்பட்டன. ரூபாய் நான்கு கோடி நிதியில், இந்தப் பணிகளைத் தமிழ்நாடு அரசின் தாட்கோ நிறுவனம் மேற்கொண்டது. மணிமண்டபக் கட்டடம் 8,285 சதுர அடி பரப்பளவு கொண்டது. 55 அடி விட்டத்தில், அரைக் கோள வடிவ குவிமாடத்துடன் உருவாக்கப்பட்டது.

இந்த வடிவமைப்பு நாக்பூரில் அமைந்துள்ள ‘தீக்ஷா பூமி’யைப் போன்றதும், அவரது தகன பூமியான மும்பையின் தாதர் கடற்கரையில் அமைந்துள்ள ‘சைத்திய பூமி’யில் உள்ள குவிமாட அமைப்புடனும் ஒப்பிடக் கூடியது. இப்படிச் சிறப்பான வடிவமைப்புடன் அமைக்கப் பட்ட அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தை 2000-ஆம் ஆண்டு ஜூன் மாதம் பத்தாம் தேதி நாட்டுக்கு அர்ப்பணித்தார், டாக்டர் கலைஞர்.

### பாபாசாகேப் அம்பேத்கரைப் போற்றிய கலைஞர்

- 1972 சென்னையில் அம்பேத்கர் கலைக்கல்லூரி.
- 1972 ஹாமில்டன் பாலத்துக்கு அம்பேத்கர் பெயர் சூட்டல்.
- 1989 மும்பை மராத்வாடா பல்கலைக்கழக தந்தி அனுப்பும் போராட்டம்.
- 1990 அம்பேத்கர் நூற்றாண்டு விழா கொண்டாட்டம்.
- 1990 சென்னை சட்டக்கல்லூரிக்கு அம்பேத்கர் பெயர் சூட்டல்.
- 1997 டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைப்பு.
- 1997 சேலம் பெரியார் பல்கலை அம்பேத்கர் இருக்கை.
- 1998 தமிழ்நாடு அரசின் டாக்டர் அம்பேத்கர் விருது தொடக்கம்.

### அண்ணலின் சிலை

ஒவ்வோர் ஆண்டும் அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளான ஏப்ரல் 14 அன்றும், அவரது நினைவு நாளான டிசம்பர் 6 அன்றும் அண்ணலின் மணிமண்டபத்தில் மிகப்பெரிய அளவில் மக்கள் கூடி, அவரது நினைவுகளைப் போற்றுகின்றனர். அந்த ஒன்றுகூடலுக்குப் பின்னால், கலைஞர் என்ற மகத்தான மனிதரின் செயல்திறனைப் பறைசாற்றும் கல்வெட்டினை அங்கு காணலாம்.

முத்தமிழறிஞர் கலைஞருக்குப் பின், ‘திராவிட மாடல்’ அரசை வழிநடத்திக் கொண்டிருக்கும் நமது முதலமைச்சர் மணிமண்டபத்தைச் சீரமைத்து, அங்கு அண்ணலுக்குச் சிலை எடுத்ததும் வரலாற்றில் எழுதப்பட வேண்டியது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் கொட்டும் மழையில் குடைபிடித்துக் கொண்டே அண்ணலின் சிலையைத் திறந்து வைத்து அவருக்கு மரியாதை செய்தார்.

டாக்டர் அம்பேத்கரின் பிறந்த நாள், ‘சமத்துவ நாள்’ எனக் கடைப்பிடிக்கப்படும் என அறிவித்து, அதன்படி 2022-ஆம் ஆண்டில் அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில்தான் முதலமைச்சரும், அமைச்சர்களும் சமத்துவ நாள் உறுதிமொழியை ஏற்றனர். சாதிய, சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகவும், உரிமைக்காகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் குரல் கொடுத்து, எளிய மக்களின் உணர்வை ஊட்டியவர் அம்பேத்கர் எனப் புகழாரம் செய்தார் நமது முதலமைச்சர். அண்ணலின் அடியொற்றியே முத்தமிழறிஞர் கலைஞரின் அரசியல் பயணமும், ஆட்சி நடைமுறைகளும் இருந்தன என்றால் மிகையில்லை.

அவருக்கு மணிமண்டபம் கட்டி எழுப்பியதன் மூலம் அங்கு எழுந்து நிற்கிறார் அண்ணல். அவரை அடுத்தத் தலைமுறைக்குக் கொண்டு சேர்க்க, அந்த மண்டபத்தை உருவாக்கிய கலைஞரின் வரலாற்றையும் சேர்த்துப் பேசுவது வரலாற்றுக்கு நாம் சேர்க்கும் நியாயம்.

...வலம் வருவோம்

## ‘சாகித்ய அகாடமி’யில் கலைஞர்!




**சா**கித்ய அகாடமியின் ’இந்திய இலக்கியச் சிற்பிகள்’ புத்தக வரிசையில் இடம் பெற்றிருக்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர். தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் எழுதிய இந்த நூல், சமீபத்தில் வெளியானது. கலைஞரின் இலக்கிய உரைகள், கட்டுரை, கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், திரைப்படம், சொற்பொழிவு, தன்வரலாறு என்று கடல் போலிருக்கும் பன்முகப் படைப்புலகை, கரையில் கால் நனைக்கும் விதத்தில் சுவைபட விவரிக்கிறது இந்த நூல். இந்திய இலக்கியப் பரப்பில் நிலவும் இருவேறு மரபுகளில், தமிழ் மரபில் ஆழங்கால்பட்ட கலைஞரை சங்க இலக்கியம் முதல் சமகால இலக்கியம் வரை பரிச்சயமும் நிபுணத்துவமும் கொண்ட இலக்கியவாதியாக மிகச் சுலபமாக நம்மால் நிறுவிட முடியும். இந்நூல் அச்செயலை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறது. உண்மையைத் தேடி அலையும் வாசகனுக்கு இருக்கும் தேடல் உணர்வு கடைசி வரை கலைஞரிடம் இருந்தது. கலைஞரின் நூற்றாண்டு தொடங்கி இருக்கும் இத்தருணத்தில் இப்படியான ஆய்வுப் படைப்புகள் வெளிவருவது அவரது பன்முக ஆளுமையைப் புரிந்துகொள்வதற்கான திறவுகோலாக இருக்கும்.

## ஃப்ளாஷ்பேக்




சாகுல் ஹமீது

### அறிமுகமும் வரவேற்பும்!

**பு**துக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியத்தில் இருக்கும் தி.மு.க. அலுவலகத்துக்கு 1990-ஆம் ஆண்டு வருகை தந்தார், இன்றைய முதலமைச்சர் அவர்கள். கழகம் ஆட்சியிலிருந்த நேரத்தில் தமிழ்நாடு முழுக்க அவர் மேற்கொண்ட சுற்றுப்பயணம் அனைத்துத் தரப்பு மக்களிடமும் நல்ல வரவேற்பைப் பெற்றது. அந்த சமயத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த த.சந்திரசேகர் அவர்கள் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த என்னை, கழகத் தலைவர் தளபதியிடம் அறிமுகம் செய்து வைத்தார். அவரை வரவேற்று, நான் கைத்தறி ஆடை அணிவித்த போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**-சாகுல் ஹமீது,**
**ஊராட்சி மன்றத் தலைவர்,**
**அரசர்குளம் தென்பாதி,**
**புதுக்கோட்டை மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018.
வாட்ஸ்அப் எண்: 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மனசாட்சியும் - மக்களும்

**1957-ஆம் ஆண்டுத் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் வடஆற்காடு மாவட்ட மாநாடு திருவண்ணாமலையில் நடைபெற்றது. இந்தி எதிர்ப்பு மாநாடாகவும், கழக மாநாடாகவும் செப்டம்பர் மாதம் 21, 22 தேதிகளில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரை வரலாற்றுச் சிறப்புமிக்கது. “எங்களுக்கு இந்த உலகத்தில் இரண்டு எஜமானர்கள்தாம் உண்டு. ஒன்று எங்கள் மனசாட்சி, மற்றது இந்த நாட்டு மக்கள்” என முழங்கினார். மனசாட்சியையும், மக்களையும் தாண்டி, நாம் அஞ்சுகிற பொருள் வேறு இல்லை என அண்ணாவின் முழக்கமே நமது ஆட்சியின் வழிகாட்டியாக அமைந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 198




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131